3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் எது பேசினாலும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்து பெருமை சேர்த்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 150 முதல் 162 வரையிலான 13 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, யாதொரு பிரதிபலனும் கருதாமல் மக்கள் நலன் என்கிற ஒற்றை இலட்சியத்தோடு நீதிமுறை தவறாத பொற்கால ஆட்சியை நடத்தி, அனைத்துத் தரப்பு

மக்களையும் வாழவைத்துக்கொண்டிருக்கும் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 76 முதல் 85 வரையிலான 10 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 20–உயர் கல்வித் துறை

(ஆ) கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

(இ) கோரிக்கை எண் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)

(அ) கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20—உயர் கல்வித் துறை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

"உயர் கல்வித் துறை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,339,72,83,000/–, மூலதனக் கணக்கில் ரூ.288,20,19,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.